செ.வெ.எண்: 14 நாள்: 08.07.2020

# கோயம்புத்தூர் மாநகராட்சியில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

---

கோயம்புத்தூர் மாநகராட்சியில், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளான சின்னம்மாள் வீதி, கே.கே.புதூர் மணியம் வேலப்பர் வீதி, காளியப்பன் வீதி ஆகிய பகுதிகளில் இன்று(08.07.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவ்வாய்வின் போது மாநகராட்சி உதவி ஆணையாளர்(மேற்கு) திரு.செந்திலரசன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், கோயம்புத்தூர் மாவட்டத்தில் அதிகளவில் கொரோனா வைரஸ் தொற்று குறித்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்ட நபர்களின் குடும்பத்தினர், அருகில் வசிப்போர், தொடர்பில் இருந்த நபர்கள் ஆகியோருக்கு தொடர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி, பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் வசித்து வந்த பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 13 இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் கோயம்புத்தூர் மாநகரப்பகுதிகளான சின்னம்மாள் வீதி, கே.கே.புதூர் மணியம் வேலப்பர் வீதி, காளியப்பன் வீதி ஆகிய தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் இன்று நேரில் பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், அப்பகுதிகளை தொடர்ந்து கண்காணிப்பு வளையத்திற்குள் வைத்திருக்கவும், அப்பகுதி மக்களுக்கு தேவையான அத்தியாவசியப்பொருட்கள் தடையின்றி கிடைப்பதற்கும் மாநகராட்சி மற்றும்

வருவாய் துறை அலுவலர்கள் உறுதி செய்திட உத்தரவிட்டதுடன், இப்பகுதிகளில் தினமும் கிருமிநாசினிகள் மூலம் சுத்தம் செய்யவும் உத்தரவிட்டார்.

மேலும், அப்பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் விடுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களிடம் அவர்களின் உடல்நலம் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்களை தொடர்ந்து கண்காணித்திட வருவாய்த்துறை மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.ராசாமணி இ.ஆ.ப., கேட்டுக்கொண்டார்.

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**